**செய்தி வெளியீடு எண்: 44/2022** **நாள்: 14.06.2022**

**பத்திரிக்கை செய்தி**

**<u>சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான முதன்மை செயலாளர் திரு.எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப., அவர்கள் இரண்டாம் கட்ட மெட்ரோ இரயில் பணிகளை ஆய்வு செய்தார்</u>**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இரண்டாம் கட்ட பணிகள் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது. இதில் பூவிருந்தவல்லி முதல் சாலிகிராமம் வரையில் மெட்ரோ இரயில் உயர்மட்ட பாதை அமைக்கும் பணிகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான முதன்மை செயலாளர் திரு.எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.06.2022) மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்டப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது மேலாண்மை இயக்குநரான முதன்மை செயலாளர் திரு.எம்.ஏ.சித்திக் தெரிவித்ததாவது:-

சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்ட பணிக்கு தேவையான உயர்மட்ட மேம்பாலம், உத்திரம் ஆகியவை தயார் செய்யும் பணி பூவிருந்தவல்லி பைபாஸ் சாலை, காட்டுப்பாக்கம் பகுதியில் வேகமாக நடைபெற்று வருகிறது. ஆய்வின் போது, மேலாண்மை இயக்குநர் திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுகா கோளப்பஞ்சேரில் உள்ள வார்ப்பு யார்டுக்கு சென்று அங்கு யு-கிர்டர் பணிகள், பியர் கேப் பணிகள் மற்றும் கட்டுமான பொருள்களின் தர ஆய்வகத்தை பார்வையிட்டார்.

பூவிருந்தவல்லி முதல் போரூர் வரையிலான சாலை பாதையில் குமணன்சாவடி சந்திப்பிலிருந்து கரையான்சாவடி வரையிலான 2.3 கி.மீ தூரத்திற்கு உயர்மட்ட பாலம் அமைப்பதற்கான பணி நடைபெற்று வருகிறது. இதையடுத்து காட்டுபாக்கம் பகுதியில் இராட்சத இயந்திரம் மூலம் உயர்மட்ட தூண்கள் அமைக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. இப்பணிகள் அனைத்தும் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பூவிருந்தவல்லி முதல் போரூர் வரை 7.94 கி.மீ தூரம் 4-வது வழித்தடத்தில் மெட்ரோ இரயில் சென்று வருவதற்கான பாதை அமைக்கப்பட்டு வருகிறது. இப்பாதையில் தற்போது 111 இராட்சத தூண்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பாதையில் 342 இராட்சத தூண்கள் அமைக்கப்படவுள்ளது. பூவிருந்தவல்லி முதல் போரூர் வரையிலான இப்பணிகள் அனைத்தும் ரூ.1,147 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. டி. அர்ச்சுனன் (திட்டங்கள்), தலைமை பொது மேலாளர்கள் திரு. எஸ். அசோக் குமார் (தடம் மற்றும் உயர்மட்ட கட்டுமானம்), திருமதி. ரேகா பிரகாஷ் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) மற்றும் உயர் அலுவலர்கள் ஆய்வின் போது உடனிருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**